புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

==========================================================================

***பாண்டிய அரச மரபுப் புலவர்களைத் தனித்து அடையாளப்படுத்தல்***
***- சங்கப் பாடல்கள் வழி மீட்டுருவாக்கம்***

***UNIQUE IDENTIFICATION OF PANDYA ROYAL POETS***
***- SANGAM SONGS WAY OF RECOVERY***

==========================================================================

***இ.முனியசாமி,***
***முனைவர்பட்ட ஆய்வாளர்(பகுதி நேரம்),***
*தமிழாய்வுத் துறை,*
*பிஷப் ஹீபர் கல்லூரி(தன்னாட்சி),*
*(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது),*
*திருச்சிராப்பள்ளி.*

***முனைவர் மு.முனீஸ் மூர்த்தி,***
***நெறியாளர் & உதவிப் பேராசிரியர்,***
*தமிழாய்வுத் துறை,*
*பிஷப் ஹீபர் கல்லூரி(தன்னாட்சி),*
*(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது),*
*திருச்சிராப்பள்ளி.*

==========================================================================

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க காலத் தமிழகம் மூவேந்தர்களின் ஆட்சிக்கு உட்பட்ட பெரு நிலப்பரப்பாக அமைந்திருந்தது. மூவேந்தர்களுள் தமிழுக்கெனச் சங்கம் அமைத்துத் தமிழ்ப் புலவர்களைப் புரந்துகொண்டு அரசோச்சியவர்கள் பாண்டியர்கள். இப்பாண்டியர்கள் நாடாளும் மன்னரன்றி தமிழ்ப் புலமை நிரம்பப்பெற்ற பெரும் புலவர்களாகவும் திகழ்ந்துள்ளனர். இப்பாண்டிய மரபினருள் பலர் சங்கப் பாடல்கள் புனைந்துள்ளனர். இவ்வரச மரபைச் சார்ந்த சில புலவர்களின் பெயர்களில் அறிஞர்களிடையே கருத்து முரண்பாடுகள் காணப்பெறுகின்றன. இக்கருத்து முரண்களைக் களைந்து அப்புலவர் பெயர்களை மீட்டுருவாக்கம் செய்யும் வகையிலும், இப்பாண்டிய அரச மரபுப் புலவர்களைத் தனித்து அடையாளப்படுத்தும் நோக்கிலும் இக்கட்டுரை அமைந்துள்ளது. இப்பாண்டிய அரச மரபுப் புலவர்களை அகம் பாடியோர், புறம் பாடியோர், அகமும் புறமும் பாடியோர் என*

அவர்தம் பாடல்கள் வழி வகைப்படுத்தப்பெற்று விளக்கப்பெற்றுள்ளன. இவர்களுள் குறுவழுதியார், பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி, கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி போன்றோர் பெயர்களில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்பெறுகின்றன. அவற்றுள் குறுவழுதியார் வேறு அண்டர் மகன் குறுவழுதியார் வேறு எனச் சதாசிவ பண்டாரத்தாரும் புலவர் கா.கோவிந்தனும் கருதுகின்றனர். உ.வே.சாமிநாத ஐயர் ஒருவரோ வேறு தெரியவில்லை எனச் சுட்டிச் செல்கிறார். எனினும் இப்புலவரது இயற்பெயரில் மாறுபாடு இன்மையான் இருவரும் ஒருவர் என முடிவு காணப்பெற்றுள்ளது. பாண்டியன் மாறன் வழுதி (மாறன் வழுதி) வேறு, பாண்டியன் பன்னாடு தந்தான்(பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி) வேறு எனச் சதாசிவ பண்டாரத்தார், உ.வே.சா., பின்த்தூரார் போன்றோர் எண்ணுகின்றனர். எனினும் இப்பெயர்கள் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்ற ஒருவனையே குறிக்க வழங்கி வந்துள்ளது என அறியப்பெற்றுள்ளது. இளம்பெருவழுதி என்பவரும் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்பவரும் ஒருவர் எனச் சிலரும் வேறுவேறு எனச் சிலரும் குறிப்பிடுகின்றனர். எனினும் இருவரும் ஒருவர் என்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பெற்றுள்ளது. மாலை மாறன் என்பவரை பாண்டிய அரச மரபினராக யாரும் சுட்டவில்லை. அவர் பெயர்கொண்டு அவரைப் பாண்டிய அரச மரபினர் எனத் தனித்து அடையாளப்படுத்தப்பெற்றுள்ளது.

**ன்னுரை**

பண்டைக் காலத்தில் தமிழகம் பல்வேறு பகுதிகளாகப் பாகுபடுத்தப்பெற்று, அவ்வப் பகுதிகளைத் தனித்தனி நாடுகளாகக் கொண்டு பெருநில வேந்தர்களும் குறுநில மன்னர்களும் அரசாண்டு வந்துள்ளனர். அவற்றுள் பெரும்பகுதியைப் பெருநில வேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் தங்களது நாட்டுக்கு உட்படுத்தி ஆட்சி புரிந்துள்ளனர். அவர்களுள் பாண்டிய வேந்தர்கள் மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழகத்தின் தென்பகுதியை ஆட்சிபுரிந்து வந்துள்ளனர். இப்பாண்டிய வேந்தர்கள் நாடு காவலன்றித் தமிழ் மொழி வளர்க்கச் சங்கம் அமைத்தும், புலவர்களை ஆதரித்தும், தமிழ் நூல்களைத் தொகுப்பித்தும் தமிழ்ப்பணி ஆற்றியுள்ளனர். அவையன்றி பல பாண்டிய வேந்தர்கள் தாமும் கவி பாடித் தமது கவியாற்றலையும் தமிழ்ப்புலமையையும் வெளிப்படுத்தியுள்ளனர். அவ்வகையில் சங்கப் பாடல் பாடிய பாண்டிய அரச மரபைச் சார்ந்த புலவர்களைத் தனித்து அடையாளப்படுத்தும் வகையிலும் அவர்தம் பெயர்களில் அறிஞர்களிடையே காணலாகும் கருத்து முரண்களைக் களைந்து மீட்டுருவாக்கம் செய்யும் வகையிலும் இக்கட்டுரை அமைகிறது.

**பாண்டியர்கள்**

வரலாற்று காலத்திற்கு முன்பிருந்தே தமிழகத்தை ஆட்சிபுரிந்தவர்கள் பாண்டியர்கள் எனக் குறிப்பிடுகின்றனர். அவர்கள் மதுரையைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்துள்ளனர். பழங்காலத்துத் தோன்றிய பெரும்பான்மையானத் தமிழ் நூல்கள் இவ்வேந்தர்களது அவையிலேயே அரங்கேற்றப்பட்டுள்ளன. பாண்டியர்களை முற்காலப் பாண்டியர்கள், சங்க காலப் பாண்டியர்கள், பிற்காலப் பாண்டியர்கள் எனப் பாகுபடுத்துகின்றனர். இவர்களுள் சங்ககாலப் பாண்டியர்கள் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றியுள்ளனர் என்பது சங்க நூல்கள் வழியும் இறையனார் களவியல் உரை வழியும் அறிய முடிகின்றன. இம்மன்னர்கள் நாடு காவல் அன்றி தமிழ்மொழி வளர்ச்சிக்கென சங்கம் அமைத்தும் புலவர்களைப் புரந்துகொண்டும் பாடல்கள் பாடியும் வாழ்ந்து வந்துள்ளனர். தமிழில் கிடைக்கப்பெறும் முதல் நூலான தொல்காப்பியமும் நிலந்தரு திருவிற்பாண்டியன் என்ற மன்னன் அவையிலேயே அரங்கேற்றப்பெற்றது என்பது பனம்பாரனர் பாயிரம் வழி அறியலாகிறது.

சங்ககாலப் பாண்டியர்களுள் அண்டர் மகன் குறுவழுதியார், அறிவுடை நம்பி, ஆரியப்படை கடந்த பாண்டிய நெடுஞ்செழியன், இளம்பெருவழுதியார், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி, பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், நல்வழுதியார், பன்னாடு தந்த

*பாண்டியன் மாறன் வழுதி, மாலை மாறன், முடத்திருமாறன் முதலானோர் சங்கப் பாடல்கள் பாடியவர்களாகக் காணப்பெறுகின்றனர். இவர்தம் பாடல்கள் கொண்டு,*

*அ. அகப்பாடல் பாடிய பாண்டிய மன்னர்கள்*

*ஆ. புறப்பாடல் பாடிய பாண்டிய மன்னர்கள்*

*இ. அகப்பாடலும் புறப்பாடலும் பாடிய பாண்டிய மன்னர்கள்*

*என இப்பாண்டிய மன்னர்களை வகைப்படுத்தலாம்.*

***அ. அகப்பாடல் பாடிய பாண்டிய மன்னர்கள்***

*புற வாழ்வியலோடு பெரிதும் தொடர்புடையவர்களாக மன்னர்கள் இருப்பினும் பல பாண்டிய மன்னர்கள் அகப்பாடல்கள் பல புனைந்துள்ளனர். மற்றைய புலவர்கள் போலவே இப்பாண்டிய மன்னர்களது பாடல்களிலும் அகப்பொருள் கருத்துக்கள் சிறந்து காணப்பெறுகின்றன. அவ்வகையில் அகப்பாடல்கள் மட்டும் பாடிய பாண்டிய அரச மரபுப் புலவர்களாக உக்கிரப்பெருவழுதியார், நல்வழுதியார், பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி, மாலை மாறன், முடத்திருமாறன் முதலானோர் காணப்பெறுகின்றனர்.*

***பாண்டியன் உக்கிரப்பெருவழுதி***

*உக்கிரப்பெருவழுதி எனும் இயற்பெயர் கொண்டவர். இவர் உக்கிரப்பெருவழுதி எனவும் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி எனவும் கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி எனவும் அழைக்கப்பெறுகின்றார். 'கானப்பேரெயில் கடந்த' என்பது இவரது வெற்றிச் சிறப்பின் காரணமாக அடையாக அழைக்கப்பெற்றதாகும். இவ்வுக்கிரப்பெருவழுதியார் கடைச்சங்க காலத்தின் இறுதியில் சங்கம் புரந்த பாண்டிய மன்னனாவான். இதனை, "முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதிரென்ப, அவருட் கவியரங் கேறினார் மூவர் பாண்டியரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரையென்ப"(நக்கீரனார், 2010:5-6) என இறையனார் களவியல் உரைக்கண் குறிப்பிடுகிறார்.*

*பல சிற்றரண்களை உள்ளிடக்கிய பேரரணை கானப்பேரெயில் (காளையார்கோவில்) எனுமிடத்தில் அமைத்து பகைவர் எளிதில் வெற்றி கொள்ளமுடியா வண்ணம் அவ்விடத்தில் ஆட்சிபுரிந்தவன் குறுநில மன்னனான வேங்கைமார்பன். பகைவர் அணுகுதற்கு அரியக் கானப்பேரெயில் கோட்டையைத் தகர்த்து வேங்கைமார்பனை வெற்றி கொண்டவன் உக்கிரப்பெருவழுதி என்பவன். இக்காரணத்தாலே கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி என அழைக்கப்பெற்றான் என அறியமுடிகிறது. இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனின் மகன் எனக் குறிப்பிடப்பெறுகிறான். 'நாடு செழிப்போடும் வளமையோடும் இருக்க வேண்டுமாயின் பகையுணர்வு நீங்கி நட்புபூண்டு அரசாட்சி புரியவேண்டும் என்ற சிந்தனை கொண்டு உக்கிரப்பெருவழுதி வாழ்ந்துள்ளான் என ஔவையார்(புறம்.367) புகழ்ந்து கூறியுள்ளார். சேரமான் மாவெண்கோ என்ற சேரனையும், ராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்ற சோழனையும் நட்பாகக் கொண்டு அரசாட்சி புரிந்து வந்துள்ளான். இவன் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும்(98), அகநானூற்றில் ஒன்றும்(26) என இரு பாடல்கள் காணப்பெறுகின்றன.*

***நல்வழுதியார்***

*நல்வழுதியார் எனும் புலவர் சங்கத் தொகை நூலான பரிபாடலின் 12-ஆம் பாடலன்றி அவர் பாடியனவாக வேறுபாடல்கள் ஏதும் காணப்பெறவில்லை. இவர் பெயரைக் கொண்டு காணும்போது இவரைப் பாண்டிய குடியினர் எனக் கருதவேண்டியுள்ளது. ஏனெனில் செழியன், வழுதி, மாறன், பஞ்சவன், தென்னவன், தென்னர் முதலான பெயர்கள் பாண்டிய மன்னர்களது குடிப்பெயரை உணர்த்துவனவாகும். எனவே நல்வழுதியார் பெயரில் இடம்பெற்றுள்ள 'வழுதி' எனும் சொல் பாண்டிய மன்னர்களது குடிமரபினைக் குறிக்க வழங்கி வந்துள்ளமையான் இவர் பாண்டியர் குடியினர் என்பது புலனாகிறது.*

நல்வழுதியார் குறித்து *“வழுதியாரென்பது அவர் பாண்டியர் குடியிற் பிறந்தவரென்பதைக் காட்டுகிறது”*(உ.வே.சா. *1918:*பாடினோர் வரலாறு-*xvii*) எனவும், *“இவர் பெயரமைதியால் இவரைப் பாண்டியர் குடியினர் என்று கருதலாம். மன்னர் மரபினரேனும், மாண்புற்ற செழுந்தமிழ்ப் புலமையால் சிறப்புற்றும் விளங்கியவர் இவர்”*(புலியூக்கேசிகன் *2009:250*) எனவும் குறிப்பிடுகின்றனர். சதாசிவ பண்டாரத்தார் தனது ‘பாண்டியர் வரலாறு’ எனும் நூலில் ‘நல்வழுதி’ என்பவன் கடைச்சங்க கால மன்னனாக ஆட்சி புரிந்தவன். பரிபாடற்கண் பாடல் பாடியவன் எனக் குறிப்பிடுகிறார். மேற்குறித்த சான்றோர்களது கூற்றுக்களால் நல்வழுதியார் பாண்டியர் குடியில் பிறந்து, பாண்டிய நாட்டு மன்னனாக ஆட்சிபுரிந்து வந்துள்ளார் என்பது தெளிவாகிறது.

இப்புலவர் வையை ஆறு குறித்த தனது பரிபாடலில் வையை ஆற்றின் நீரோட்டச் சிறப்பும் அவ்வையை ஆற்றின் வெள்ளமானது மதுரையைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த மதிலை முட்டிச் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். இவரது பாடல் வழி மதுரை நகரைச் சுற்றி முற்காலத்தில் மதில் சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தன என்பதை அறிய முடிகிறது. இவ்வாறு வையை ஆறு குறித்தும் மதுரையின் மதில் சிறப்புக் குறித்தும் குறிப்பிட்டுள்ள இவரது பாடல் கருத்தும் நல்வழுதியார் மதுரையில் வாழ்ந்தவர் என்பதை உறுதிபடுத்துகின்றது.

**பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி**

பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்பவன் கடைச்சங்க காலப் பாண்டிய மன்னர்களுள் ஒருவன். இவன் பாடியனவாகச் சங்கத் தொகை நூற்களுள் மூன்று பாடல்கள் காணப்பெறுகின்றன. அவையன்றி எட்டுத்தொகை நூற்களுள் ஒன்றான நற்றிணையைத் தொகுப்பித்தவனும் இவனே ஆவான். எனினும் இவன் பெயர் குறுந்தொகை பாடற்கண்(*270*) பாண்டியன் பன்னாடு தந்தான் எனவும், நற்றிணை *97*-ஆம் பாடற்கண் மாறன் வழுதி எனவும், *301*-ஆம் பாடற்கண் பாண்டியன் மாறன் வழுதி எனவும் நற்றிணையைத் தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி எனவும் காணப்பெறுகின்றன. இவ்வாறு காணப்பெறுதலான் பாண்டியன் மாறன் வழுதியும் பாண்டியன் பன்னாடு தந்தான் என்பவனும் வேறு வேறானவர் எனச் சிலர் குறிப்பிடுகின்றனர். எனினும் ‘பன்னாடு தந்தான்’ என்பதைப் பெயராகக் கொள்ளாது அடைமொழியாகக் கொள்ளுதலே பொருந்தும். அவையன்றி ‘பன்னாடு தந்தான்’ என்பது பல நாடுகளை வெற்றிகொண்டு தன்னாட்டகத்து உட்படுத்தியவன் என்ற பொருளுடையதாகும். ஆகையால் மாறன் வழுதி, பாண்டியன் மாறன் வழுதி, பாண்டியன் பன்னாடு தந்தான் என்ற பெயர்கள் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்ற ஒருவரையே குறிக்க வந்த பெயர்களாகும். கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியார் என்ற மன்னன் பெயர் போல் இம்மன்னனது பெயரும் ஒவ்வொரு பாடற்கண்ணும் இயற்பெயருடனும், அடைமொழியுடன் இணைத்தும், அடைமொழி மட்டும் கொண்டும் காணப்பெறுகிறது.

மேற்குறித்த காரணமன்றிச் சதாசிவ பண்டாரத்தார் தனது பாண்டியர் வரலாறு நூலில் கடைச்சங்க கால மன்னர்களுள் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்ற மன்னன் பெயரை மட்டுமே குறிப்பிடுகின்றார். ஆகையால் மேற்குறித்த பெயர்கள் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்ற ஒருவனையே குறித்து வழங்கிய பெயர்களே எனத் துணியலாம்.

**மாலை மாறன்**

இவரது பெயர் மாலை மாறன் எனவும் மாலை மாறனார் எனவும் குறுந்தொகைப் பதிப்புகளில் காணப்பெறுகின்றன. பண்டைக் காலத்தில் அரச மரபுப் பெயர்களை அவ்வரச மரபைச் சார்ந்தவர்களே பெரும்பாலும தங்கள் பெயரோடு இணைத்து வைத்துள்ளனர் என்பதைக் காணமுடிகிறது. ஆகையால் மாறன் என்னும் பாண்டிய அரச மரபிற்குரிய பெயர் இப்புலவரது பெயரில் இடம்பெற்றுள்ளமையான் இவரைப் பாண்டியர் குடியினர் எனக் குறிப்பிடலாம். எனினும் மாலை என்ற சிறப்பு அடை இடம்பெற்றமைக்கான காரணம் விளங்கவில்லை எனப் புலவர் கா.கோவிந்தன் குறிப்பிடுகிறார். இவரது பாடலில்,

*“வாள்போல் வாய கொழுமடல் தாழை*
*மாலை வேனாட்டு வேலி யாகும்” (குறுந். 245:3-4)*

எனக் கடற்கரையில் உள்ள கொழுத்த மடலை உடைய தாழைகள் நிரலாக வேல்களை நட்டுவைத்த வேலிபோன்று காவலாக உள்ளது எனத் தாழைக்கு ‘மாலை வேனாட்டு வேலி யாகும்’ என்ற உவமை கையாளப்பெற்றுள்ளது. ஆகையால் இவ்வுவமையின் தொடக்கத்தில் உள்ள மாலை என்பதை மாறன் எனும் பெயருக்கு முன் வைத்து வழங்கியுள்ளனர் எனக் கருதவும் இடமுண்டு எனப் புவலர் கா.கோவிந்தன் கருதுகின்றார். இவர் பாடியதாக குறுந்தொகை 245-ஆம் பாடல் ஒன்று மட்டுமே காணப்பெறுகிறது.

**முடத்திருமாறன்**

இடைச்சங்க காலத்தின் இறுதியிலும் கடைச்சங்க காலத்தின் தொடக்கத்திலும் பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்தவன் முடத்திருமாறன் ஆவான். இதனை *“அவரைச் சங்கமிரீ இயினர் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறனீறாக ஐம்பத்தொன்பதின்மரென்ப. அவருட் கவியரங்கேறினார் ஐவர் பாண்டியரென்ப, அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாட புரத்தென்ப”, முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதிரென்ப, அவருட் கவியரங்கேறினார் மூவர் பாண்டியரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்திர மதுரையென்ப”*(நக்கீரனார், 2010:5-6) என இறையனார் களவியல் உரைக்கண் குறிப்பிடுகிறார். இடைச்சங்கம் இருந்த கபாடபுரம் கடல்கோளால் அழிந்த பின்னர் முடத்திருமாறன் இன்றைய மதுரையைப் பாண்டியர்களின் தலைநகராக்கி, இம்மதுரையில் முதல் பாண்டிய அரசனாக ஆட்சி புரிந்தவன் ஆவான். அவையன்றி புலவர்கள் கூடித் தமிழ் வளர்க்கக் கடைச்சங்கத்தையும் அங்கு நிறுவித் தமிழ் வளர்க்க உதவியவன். இதனை, *“இவன் காலத்தே நிகழ்ந்த ஒரு பெருங்கடல்கோளால், பாண்டி நாட்டின் பெருநிலப் பரப்பும் அதன் தலைநகராய கபாடபுரமும் அழிந்தொழிந்தன. இக்கடல்கோளால் அழிவுறாது பிழைத்திருந்த பாண்டியன் முடத்திருமாறனும், தமிழ்ப் புலவர்களும் சிறிது வடக்கே சென்று மணலூர் என்னும் சிற்றூர் ஒன்றில் சின்னாள் தங்கிப் பின்னர்க் கூடல்மா நகரத்து வாழ்ந்தனர். முடத்திருமாறன் புலவர்கள் துணைகொண்டு, ஆங்கே கடைச்சங்கத்தை அமைத்துச் செந்தமிழ் வளரத் துணைபுரிந்தான்”*(புலவர் கா.கோவிந்தன், 1964:116) எனச் சங்கத் தமிழ் புலவர் வரிசை -07 காவல பாவலர்கள் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளமையும் உறுதிபடுத்துவதாக உள்ளது.

இவர் பாடியனவாக நற்றிணைக்கண் இரண்டு(105,228) பாடல்கள் காணப்பெறுகின்றன. இதில் 105-ஆம் பாடலில் குட்டுவன் சேரலின் குடமலைச் சுனையிலுள்ள கரிய இதழையுடைய குவளை மலரைத் தலைவி சூடியுள்ளாள் எனக் குட்டுவன் சேரலைப் புகழ்ந்துள்ளார். ஆதலால் முடத்திருமாறன் குட்டுவன் சேரல் காலத்தில் வாழ்ந்தவன் என்றும் அவனுடன் மிகுந்த நட்பு பூண்டவன் என்றும் அறிய முடிகிறது.

**ஆ. புறப்பாடல் பாடிய பாண்டிய மன்னர்கள்**

போரும் பூசலும் கொண்டு வாழ்ந்த மன்னர்கள் தம் வாழ்வியலோடு தொடர்டைய புறக்கருத்துக்களைப் பாடல்களாகப் படைத்துக் காட்டியுள்ளனர். அவையன்றி சில மன்னர்களது பாடல்களில் வஞ்சினக்(சூழுரைத்தல்) கருத்துக்களும் காணப்பெறுகின்றன. புறப்பாடல் பாடிய அரச மரபுப் புலவர்களாக ஆரியப்படை கடந்த பாண்டிய நெடுஞ்செழியன், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆகியோர் காணப்பெறுகின்றனர்.

**பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்**

கடைச்சங்க காலப் பாண்டிய மன்னர்களுள் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும் ஒருவனாவான். இவனது இயற்பெயர் நெடுஞ்செழியன் என்பதாகும். தமிழகத்தின் வடவெல்லைக்கண் வந்து தங்கி, தமிழகத்தைக் கைப்பற்றக் கருதிய ஆரிய அரசனது பெரும்படையினைப் போரிட்டு வெற்றி கொண்ட சிறப்பு மிக்கவன். இச்சிறப்புக் கருதியே நெடுங்செழியன் ‘ஆரியப்படை கடந்த’ என்னும் அடைமொழி கொண்டு அழைக்கப்பெற்றுள்ளான். இவன் ஆரியரை வென்ற சிறப்பினை,

*“வடஆரியர் படை கடந்து*
*தென்தமிழ் நாடு ஒருங்கு காணப்*
*புரைதீர் கற்பின் தேவி தன்னுடன்*
*அரைசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன்*
*நெடுஞ்செழியனோடு” (சிலம்பு. 23: கட்டுரை:14-18)*

என இளங்கோவடிகள் புகழ்ந்து குறிப்பிடுகிறார்.

அறநெறி பிழையாது ஆட்சி புரிந்தவர் பாண்டிய மரபினர். அம்மரபில் தோன்றிய பாண்டிய நெடுஞ்செழியனும் அறநெறி பிழையாது, பல வெற்றிச் சிறப்போடும் தமிழ்ப் புலமையோடும் நாடாண்டு வந்துள்ளான். எனினும் கோவலன்பால் சுமத்தப்பட்ட குற்றத்திற்கு ஆராய்ந்தறிந்து வழங்காத் தீர்ப்பால் அறநெறி பிழைத்தவன் ஆயினன். தான் செய்த தவறு கோவலன் மனைவி கண்ணகி என்பாள் மூலம் தெரியவர, அதுவரை அறநெறி பிழையாதிருந்த பாண்டியர் செங்கோல் வளைந்தது. அதனைத் தன்னுயிர் கொடுத்து நிமிர்த்தவன். இதனை,

*“எம்மோ ரன்ன வேந்தர்க்கு உற்ற*
*செம்மையின் இகந்தசொற் செவிப்புலம் படாமுன்*
*உயிர்பதிப் பெயர்த்தமை உறுக ஈங்கு என*
*வல்வினை வளைத்த கோலை மன்னவன்*
*செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோல் ஆக்கியது”*
*(சிலம்பு. 25:95-99)*

எனச் சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவன் புகழ்ந்ததாக இளங்கோவடிகள் பாராட்டிக் கூறியுள்ளார். நெடுஞ்செழியன் இறந்ததைக் கண்ட அவனது மனைவி கோப்பெருந்தேவியும் அக்கணமே இறந்தாள் என்பதும் அறிய முடிகிறது.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடியதாகக் காணப்பெறுவது புறநானூறு 183-ஆம் பாடல் ஒன்றே ஆகும். பாடம் கற்பிக்கும் ஆசிரியர்க்கு உற்ற உதவிகள் செய்தும், தேவையான பொருட்களைக் கொடுத்தும் கல்வி கற்றல் வேண்டும். கல்வி கற்றவனையே உலகம் போற்றும். எக்குலத்துப் பிறந்தவனாயினும் கல்வி அவனை மேலானவனாக்கி, அறிவில் மேன்மைப்படுத்தச் செய்வனவாகும். கல்வியே ஒருவனை மேன்மைப்படுத்தும், உலகம் போற்றச் செய்யும் என்னும் அறவியல் கோட்பாட்டை வழியுறுத்துவதாக இவரது புறப்பாடல் அமைந்துள்ளது. அப்பகுதி வருமாறு,

*“உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்*
*பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே*
*……….. ………. ……… ………*
*வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்*
*கீழ்ப்பா லொருவன் கற்பின்*
*மேற்பா லொருவனு மவன்கட் படுமே” (புறம். 183)*

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

நெடுஞ்செழியன் எனும் பெயர் கொண்ட பாண்டிய மன்னர்களாக இவரன்றி, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், நம்பி நெடுஞ்செழியன் எனும் இருவரும் கடைச்சங்க காலத்தைச் சார்ந்தவர்களாகக் காணப்பெறுகின்றனர். இளமைக் காலத்திலேயே அரசாட்சி ஏற்றுப் பெருஞ் சிறப்புற்று விளங்கியவன் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். கல்விப் புலமையும் வீரமும் ஒருசேரப் பெற்றவன்.

நெடுஞ்செழியன் மிகவும் இளையவன் என எண்ணி, சோழ மன்னனான இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை, திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்னும் வேளிர் ஐவர் ஆகிய எழுவரும் பாண்டிய நாட்டைக் கைப்பற்றக் கருதி மதுரையை முற்றுகையிட்டனர். மிகுந்த சினங்கொண்டு வஞ்சினம் கூறி, நெடுஞ்செழியன் அவ்வெழுவரோடு போர் புரிந்து அவர்களைப் புறமுதுகிட்டு ஓடச்செய்து தலையாலங்கானம் எனும் இடத்தில் மறித்துப் போரிட்டு வெற்றி வாகை சூடினான். இவனது

*ஆடசிக் காலத்தில் பாண்டிய நாடு தமிழகம் முழுவதும் பரவியிருந்தது என ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.*

*ஆலங்குடி வங்கனார், ஆலம்பேரிச் சாத்தனார், கல்லாடனார், கணக்காயனார், நக்கீரனார், மாங்குடி மருதனார், மதுரை மருதன் இளநாகனார் முதலாய இருபது சங்கப் புலவர்கள் சங்கத் தொகைநூல்களில் நெடுஞ்செழியனைப் புகழ்ந்து பாடியுள்ளனர். மதுரைக்காஞ்சி இம்மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டதாகும். பாண்டிய அரசர்களுள் பல புலவர்களால் மிகுதியான பாடல்களால் புகழப்பெற்றவன் பாண்டிய நெடுஞ்செழியன் ஒருவனே ஆவான். புலவர்களால் பாராட்டப்பெற்றவனாதல் மட்டுமின்றி இவனும் சங்கப் பாடல் பாடியத் தமிழ்ப் புலமை மிக்கவனாவன் என்பதும் இவன் பாடிய புறப்பாடல் வழி அறிய முடிகிறது.*

***“சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை***
***அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ***
***டொருங்கப் படேஎ னாயிற் பொருந்திய***
***என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது***
***கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்***
***குடிபழி தூற்றுங் கோலே னாகுக***
***ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி***
***மாங்குடி மருதன் றலைவ னாக***
***உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்***
***புலவர் பாடாது வரைகவென் னிலவரை”(புறம். 72: 7-16)***

*என நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறிய பகுதிகொண்டு அவன் வீரச் சிறப்பையும் அவனது தன்னம்பிக்கையையும் உணர்ந்துகொள்ள முடிகிறது.*

### ***இ. அகப்பாடலும் புறப்பாடலும் பாடிய பாண்டிய மன்னர்கள்***

*சங்கப் பாக்கள் பாடிய புலவருள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான புலவர்கள் மட்டுமே அகப்பாடல்களும் புறப்பாடல்களும் பாடியவர்களாகக் காணப்பெறுகின்றனர். அவர்களுள் அண்டர் மகன் குறுவழுதியார், அறிவுடை நம்பி, இளம்பருவழுதியார், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் போன்றோர் அகப்பாடல்களும் புறப்பாடல்களும் பாடியவர்களாகக் காணப்பெறுகின்றனர்.*

### ***அண்டர் மகன் குறுவழுதியார்***

*அண்டர் மகன் குறுவழுதியார் எனும் பெயர் சில பதிப்புகளில் அண்டர்முன் குறுவழுதியாr்ர் எனவும் குறுவழுதியார் எனவும் காணப்பெறுகின்றன.* கோதை, இரும்பொறை, குட்டுவன், சேரல் முதலான பெயர்கள் சேரரையும் கிள்ளி, வளவன், சென்னி முதலான பெயர்கள் சோழரையும் செழியன், மாறன், வழுதி, தென்னவன், தென்னர் முதலான பெயர்கள் பாண்டிய அரச மரபையும் குறிக்க வழங்கும் பெயர்கள் ஆகும். எனவே குறுவழுதியார் பெயரில் இடம்பெற்றுள்ள ‘வழுதி’ எனும் பெயர்கொண்டு இவரைப் பாண்டியர் குடி வந்தவர் எனத் துணிய முடிகிறது. எனினும் இவர் பெயர் முன் இடம்பெற்றுள்ள ‘அண்டர்’ எனும் சொல் இடையர் குலத்தைக் குறிக்கும் பொருளுடையது. *எனவே இவரைச் சிலர் இடையர் குலத்தவர் எனக் குறிப்பிடுகின்றனர். எனினும் பண்டைக் காலத்தில் பாண்டியர் குடியினர் இடையர் குலத்தோடு உறவுபூண்டு வாழ்ந்துள்ளனர். இதனை,*

***“தென்னவன்***
***தொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய***
***நல்லினத்து ஆயர்” (முல்லைக்கலி 4:4-6)***

*எனக் குறிப்பிட்டுள்ளமை கொண்டு அறிய முடிகிறது. ஆகையால் இடையர் குலப்பெண்ணை மணந்த பாண்டியன் ஒருவனின் மகன் குறுவழுதியார் எனக் கருதலாம். அகநானூற்றுப் பதிப்பின் பாடினோர் வரலாற்றுப் பகுதியில் “அண்டர் என்ற சொல் இடையர் எனப் பொருள்படுதலால், இடையர்குலத்துப் பெண்கொண்ட பாண்டியனொருவனுக்கு இவர் மகனார் போலும்”(வே.இராஜகோபாலர்யன்1918:1) எனக் குறிப்பிடுகிறார். இவர்*

*பாண்டியர் குடிக்குரிய ‘வழுதி’ எனும் பெயரைப் பெற்றுள்ளமையானும், இடையர் குலப்பெண்ணை மணந்த பாண்டியன் ஒருவனுக்குப் பிறந்தவன் எனக் கருதப்பெறுதலானும் அண்டர் மகன் குறுவழுதியார் பாண்டிய அரச மரபினர் என அறியலாம். எனினும் சிலர் அண்டர் மகன் குறுவழுதியார் வேறு, குறுவழுதியார் வேறு எனக் குறிப்பிடுகின்றனர். எனினும் இவரது இயற்பெயரில் எந்தவித மாறுபாடும் காணப்பெறவில்லை. மாறாக இயற்பெயர் முன்னுள்ள அண்டர் மகன் என்பது இப்புலவரது சில பாடல்களில் காணப்பெறுகிறது. பண்டைக் காலத்தில் புலவர்கள் பலரது பெயர்களுக்கு முன்னர் அவர்களது தந்தை பெயரையும் இணைத்து வழங்கப்பெறுதலையும் காணமுடிகின்றது. அவ்வாறு காணப்பெறும் பெயர்கள், சிலவிடங்களில் தந்தை பெயருடனும் சிலவிடங்களில் தந்தை பெயரின்றியும் காணப்பெறுதல் உண்டு. சான்றாக, நக்கீரனார் பெயர் நக்கீரனார் எனவும் கணக்காயர் மகனார் நக்கீரனார் எனவும் காணப்பெறுதலைக் காண்க. அவ்வகையில் அகம். 150-ஆம் பாடலில் இவர் பெயர் குறுவழுதியார் எனவும் ஏனைய பாடல்களில் அண்டர் மகன் குறுவழுதியார் எனவும் காணப்பெறுகின்றன. இவர் பாடியனவாக நான்கு பாடல்கள்(அகம்.150,228, குறுந்.345, புறம்.346) காணப்பெறுகின்றன.*

***அறிவுடை நம்பி***

*இவரது பெயர் அறிவுடை நம்பி எனவும், பாண்டியன் அறிவுடை நம்பி எனவும் சங்க நூற்களில் காணப்பெறுகின்றன. அறிவுடை நம்பி என்னும் பெயர் கொண்ட ஒருவன் கடைச்சங்க காலத்தில் பாண்டிய மன்னனாக இருந்து ஆட்சி புரிந்து வந்துள்ளான் என்பதைச் சதாசிவ பண்டாரத்தாரின் ‘பாண்டிய வரலாறு’ எனும் நூலின் மூலம் அறிய முடிகிறது. இவரது பெயர் பாண்டியன் அறிவுடை நம்பி எனக் குறிப்பிடப்பெறுதலான் இவர் பாண்டிய மன்னன் என்பது வெளிப்படை. அறிவுடை நம்பி எனக் குறிப்பிடப்பெறுதலான் அறிவில் சிறந்தவர் என்பதும் நம்பி என்பது ஆடவருள் சிறந்தோர்க்கு வைத்து வழங்கும் பெயர் என்பதும் அறியலாகிறது.*

*பாண்டியன் அறிவுடை நம்பி மன்னன் அன்றி கல்வி அறிவும் இலக்கிய அறிவும் நிறம்பிய பெரும்புலவன் என்பது அறியமுடிகிறது. இதனை வெளிப்படுத்தும் வகையில் ‘செல்வங்கள் பல பெற்று பலரோடு சேர்ந்து உண்ணும் பெரும் செல்வம் உடையவராக இருப்பினும் குழந்தைப்பேறு இல்லையாயின் அவருடைய வாழ்வு பயனுடைய வாழ்வு ஆகாது. அக்குழந்தையின் குறுநடை கண்டும், சிறுகை நீட்டி உணவைப் பெற்று அதைத் தரையில் போட்டும், பிசைந்தும், வாயில் கவ்வியும், கைகளால் துழாவியும், உடம்பெல்லாம் பூசிக்கொண்டும் செயல்படும் குழந்தையின் குறுஞ்செயல்களைக் காண்பதே இன்பம். அவ்வாறன்றி குழந்தைப்பேறு இல்லாதவர் எத்தகைய செல்வம் உடையராயினும் அவர் வாழ்வு பயனற்றதே’ என்பதை,*

***“படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்***
***உடைபெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்***
***குறுகுறு நடந்து சிறுகை நீட்டி***
***இட்டுந் தொட்டுந் கவ்வியுந் துழந்தும்***
***நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்***
***மயக்குறு மக்களை இல்லோர்க்குப்***
***பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே” (புறம்.188)***

*என இவர் அழகுறப் படைத்துக் காட்டியுள்ளார். குழந்தைப்பேறு இல்லையாயின் ஒருவன் பெரிய செல்வனாயினும் அது பயனற்றதே என்ற அறக்கோட்பாட்டினை அறிவுடை நம்பி இங்கு சிறப்புறப் படைத்துள்ளார். இவர் பாடியனவையாக நான்கு பாடல்கள்(புறம்.188, நற்.15, குறுந்.230, அகம்.28) காணப்பெறுகின்றன.*

***இளம்பெருவழுதியார்***

*பரிபாடற்கண் இளம்பெருவழுதியார் பாடியனவாகத் திருமால் குறித்த 15-ஆம் பாடல் ஒன்று காணப்பெறுகிறது. கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி எனும் பெயரில் புறநானூற்றில் 182-வது பாடல் ஒன்றும் காணப்பெறுகிறது. இவ்விரு பாடல்களைப்*

பாடியவர்களும் ஒருவராவர். எனினும் இளம்பெருவழுதியார் வேறு கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி வேறு எனச் சிலர் கருதுகின்றனர்.

ஆனால் இரு பாடல்களைப் பாடிய புலவர்களது இயற்பெயர்களில் வேறுபாடு காணப்பெறவில்லை. மாறாக கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியார் எனும் பெயரிலுள்ள 'கடலுள் மாய்ந்த' என்பது மட்டுமே முன்னடையாக இடம்பெற்றுள்ளது. இம்முன்னடையானது இம்மன்னன் இறந்ததன் பின் நூலைத் தொகுத்தவர் அல்லது வேறொருவரால் இணைக்கப்பட்டிருக்கலாம். எனவே பெயரில் வேறுபாடின்மையானும் முன்னடை மட்டுமே புறநானூற்றுப் பாடல் பாடியவருக்குக் கூடுதலாக இடம்பெற்றுள்ளமையானும் இரு பாடல்களைப் பாடியோரும் ஒருவரே எனக் கொள்ளுதலே பொருந்தும். இளம்பெருவழுதியார் குறித்து, "இவ்வேந்தன் கடைச்சங்க நாளில் விளங்கிய பாண்டியர்களுள் ஒருவனாவன். இளம்பருவத்திலேயே பேரறிவினனாக இருந்தமைபற்றி இவன் 'இளம்பெருவழுதி' என்ற பெயர் பெற்றனன் போலும். 'கடலுண் மாய்ந்த' என்னும் அடைமொழிகளால் இவன் கடலிற் கலமிவர்ந்து சென்றபோது அங்கு மூழ்கியிறந்திருத்தல் வேண்டுமென்பது புலப்படுகின்றது. இவன் தண்டமிழ்ப் புலமையிற் சிறந்த பெருந்தகை மன்னனாவன். இவன் இயற்றிய இரண்டு பாடல்கள் பரிபாடலிலும் புறநானூற்றிலும் உள்ளன"(சதாசிவ பண்டாரத்தார், 2007:09) எனவும், ''கடலுள் மாய்ந்த' என்னும் முன்னடை இளம்பெருவழுதி இறந்ததன் பின்னர் சேர்த்திருக்கக் கூடும்' என உ.வே.சாமிநாதையரும் குறிப்பிட்டுள்ளமையான் இரு பாடல்களைப் பாடியதும் ஒருவரே என்பதனை மேலும் உறுதிபடுத்துவனவாக உள்ளன. இளம்பெருவழுதியார் கடைச்சங்க காலத்தில் பாண்டிய நாட்டை ஆட்சிபுரிந்த பாண்டிய மன்னனாதலால் இவர் பாண்டிய நாட்டுப் புலவர் என்பது புலனாகிறது.

**ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்**

பூதப்பாண்டியன் எனவும், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் எனவும் இவர் அழைக்கப்பெறுகிறார். தமிழ்ப் புலமையும் வீரமும் ஒருசேரப் பெற்றிருந்தவன். மனைவிபால் மிக்க பேரன்புடையவன். கடைச்சங்க காலப் பாண்டிய மன்னர்களுள் ஒருவனாகப் பாண்டிய நாட்டை சிறப்புற அரசாண்டவன். இவன் பாடியனவாக அகநானூற்றில் ஒன்றும்(25), புறநானூற்றில் ஒன்றுமாக(71) என இரண்டு பாடல்கள் காணப்பெறுகின்றன. இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் பூதப்பாண்டி என்றோர் ஊர் காணப்படுகிறது. அவ்வூரில் பிறந்தவன் பூதப்பாண்டியன் எனவும், அவன் நினைவாக அமைந்த ஊர் பூதப்பாண்டி எனவும் இருவேறு கருத்தாடல்கள் நிலவுகின்றன. பூதப்பாண்டியன் பாண்டிய அரச மரபைச் சார்ந்தவன். முடத்திருமாறன், பொற்கைப் பாண்டியன், இளம்பெருவழுதி முதலான மன்னர்களை அடுத்துப் பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்தவன். முடத்திருமாறன் காலத்திலேயே பாண்டியர் தலைநகராக மதுரை விளங்கியது என்பது இறையனார் களவியல் உரையால் தெரியலாகிறது. ஆகையால் பூதப்பாண்டி என்பது பூதப்பாண்டியன் பிறந்த ஊர் எனக் கொள்ளுதல் அவ்வளவு பொருத்தமுடையதாக இருக்காது. மாறாக அவன் நினைவாகப் பெயர்பெற்ற ஊர் எனக் கொள்ளுதலே பொருந்தும்.

பூதப்பாண்டியன் பெயர்முன் இடம்பெற்றுள்ள ஒல்லையூர் என்பது ஒலியமங்கலம் என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வொலியமங்கலம் புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூர் பண்டைக் காலத்தில் பாண்டிய நாட்டுக்கு உட்பட்ட பகுதி எனவும் சோழ நாட்டுக்கு உட்பட்ட பகுதி எனவும் முரண்பட்ட கருத்துக்களை அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். பாண்டிய நாட்டின் எல்லை குறித்து "பாண்டி மண்டலம் என்பது மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மூன்று ஜில்லாக்களையும் புதுக்கோட்டை நாட்டில் வெள்ளாற்றுக்குத் தெற்கிலுள்ள பகுதியையும் தன்னகத்துக்கொண்டு விளங்கிய நிலப்பரப்பாகும்" (சதாசிவ பண்டாரத்தார், 2010:113) எனக் குறிப்பிடுகிறார். ஆகையால் வெள்ளாற்றின் தென்பகுதி பாண்டிய நாட்டிற்கு உட்பட்டது என்றும் வடபகுதி சோழ நாட்டிற்கு உட்பட்டது என்றும் கொள்ளலாம். ஒல்லையூர் என்று கூறப்பட்ட ஒலியமங்கலம் வெள்ளாற்றின் தென்பகுதியில் காணப்பெறுகிறது. எனவே இவ்வூர் பாண்டிய நாட்டுக்கு உட்பட்டதே எனத் துணிய முடிகிறது. இவ்வொல்லையூரைப்

பூதப்பாண்டியன் காலத்தில் சோழர் கைப்பற்றி ஆடசி செய்துள்ளனர். தன் நாட்டை மீட்கும் பொருட்டுப் பகைவரோடு போரிட்டு வெற்றிகொண்டு தன் நாட்டுப் பகுதியை மீட்டெடுத்தான். இச்சிறப்புக் குறித்தே பூதப்பாண்டியனுக்கு 'ஒல்லையூர் தந்த' என்னும் அடையானது கொடுத்து அழைக்கப்பெற்றுள்ளது. அவ்வாறன்றி ஒல்லையூர் சோழர் அல்லது வேற்று அரசர் நாடாக இருப்பின் ஒல்லையூர் போர் வெற்றிக்குப்பின் பூதப்பாண்டியனை 'ஒல்லையூர் வென்ற' அல்லது 'ஒல்லையூர் கடந்த' அல்லது 'ஒல்லையூர் செருவென்ற' என்ற அடைகளுள் ஏதேனும் ஒன்றுகொண்டு அழைக்கப்பெற்றிருத்தல் கூடும். மேற்குறித்தவாறு கூறாது 'ஒல்லையூர் தந்த' எனக் கூறியமையான் ஒல்லையூர் பாண்டிய நாட்டுக்கு உட்பட்ட நாடு என்பதும் அவ்வூரை மீட்டுத்தந்தவன் எனும் பொருளிலும் 'ஒல்லையூர் தந்த' என்ற அடையானது கொடுக்கப்பட்டுள்ளது என்பதும் தெரியலாகிறது.

பூதப்பாண்டியன் மாவன், ஆந்தை, அந்துவன் சாத்தன், ஆதன் அழிசி, இயக்கன் முதலான அரசர்களைச் சிறந்த நண்பர்களாகக் கொண்டிருந்தவன். தன் மனைவியாகிய பெருங்கோப்பெண்டின் மீது மிகுந்த காதல் கொண்ட அன்புடையவன். நீதி வழுவா மன்னனாக பேராற்றல் கொண்டு விளங்கியவன் என்பன போன்றவை,

***"பொய்யா யாணர் மையற் கோமான்***
***மாவனு மன்னெயி லாந்தையு முரைசால்***
***அந்துவஞ் சாத்தனு மாத னழிசியும்***
***வெஞ்சின வியக்கனு முளப்படப் பிறரும்***
***கண்போ னண்பிற் கேளிரோடு கலந்த" (புறம்.71:11-15)***

***"ஆரம ரலறத் தாக்கித் தேரோ***
***டுவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த***
***பேரம ருண்க ணிவளினும் பிரிக" (புறம்.71:4-6)***

என அவன் பாடிய புறப்பாடலால் நன்கு விளங்குகிறது.

**முடிவுரை**

சங்கப் பாடல்களைப் பாடிய புலவர்களாக 473 பேர் காணப்பெறுகின்றனர். அவர்களுள் பாண்டிய அரச மரபைச் சார்ந்தவர்ளாக 11 பேர் காணப்பெறுகின்றனர். அவர்களது பெயர்கொண்டும் பாடல்கள் கொண்டும் ஆராயப்பட்ட முடிவுகள் கீழ்வருமாறு தொகுத்தளிக்கப்பெறுகிறது.

- ❖ பாண்டிய அரச மரபுப் புலவர்களை அகம் பாடியோர், புறம் பாடியோர், அகமும் புறமும் பாடியோர் என அவர்தம் பாடல்கள் வழி வகைப்படுத்தப்பெற்று விளக்கப்பெற்றுள்ளன.
- ❖ இவர்களுள் குறுவழுதியார், பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி, கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி போன்றோர் பெயர்களில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்பெறுகின்றன.
- ❖ குறுவழுதியார் வேறு அண்டர் மகன் குறுவழுதியார் வேறு எனச் சதாசிவ பண்டாரத்தாரும் புலவர் கா.கோவிந்தனும் கருதுகின்றனர். உ.வே.சாமிநாத ஐயர் ஒருவரோ வேறு தெரியவில்லை எனச் சுட்டிச் செல்கிறார். எனினும் இப்புலவரது இயற்பெயரில் மாறுபாடு இன்மையான் குறுவழுதியார் என்பதற்கு முன் இடம்பெற்றுள்ள அண்டர் மகன் என்பதைப் பெயரடையாகக் கொண்டு இருவரும் ஒருவர் என முடிவு காணப்பெற்றுள்ளது.
- ❖ பாண்டியன் மாறன் வழுதி (மாறன் வழுதி) வேறு, பாண்டியன் பன்னாடு தந்தான்(பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி) வேறு எனச் சதாசிவ பண்டாரத்தார், உ.வே.சா., பின்த்தூரார் போன்றோர் எண்ணுகின்றனர். எனினும் 'பன்னாடு தந்தான்' என்பது அவன் பல நாடுகளை வெற்றிகொண்ட வீரச்

*சிறப்புடையவன் எனும் பொருளில் இம்மன்னன் பெயர்முன் சிறப்படையாக வந்துள்ளது என அறியப்பெற்றுஇரு பெயர்களும் ஒருவனையே குறிக்க வழங்கி வந்துள்ளது என அறியப்பெற்றுள்ளது.*

- *இளம்பெருவழுதி என்பவரும் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்பவரும் ஒருவர் எனச் சிலரும் வேறுவேறு எனச் சிலரும் குறிப்பிடுகின்றனர். எனினும் இருவரும் ஒருவர் என்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பெற்றுள்ளது.*
- *மாலை மாறன் என்பவரை பாண்டிய அரச மரபினராக யாரும் சுட்டவில்லை. எனினும் அவர் பெயரமைதி கொண்டு அவரைப் பாண்டிய அரச மரபினர் எனத் தனித்து அடையாளப்படுத்தப்பெற்றுள்ளது.*

**துணைநூற் பட்டியல்**


*1.இராஜகோபாலார்யன் வே.(பதி.), -1923, அகநானூறு மூலமும் உரையும், கம்பர் விலாசம், மயிலாப்பூர், சென்னை.*

*2.கோவிந்தன் புலவர் கா., -1954, சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை-16(பேயனார் முதலிய 39 புலவர்கள்), திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி-6, சென்னை-1.*

*3.கோவிந்தன் புலவர் கா., -1964, சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை -07(காவல பாவலர்கள்), திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி-6, சென்னை-1.*

*4.சதாசிவ பண்டாரத்தார் டி.வி., -2007, பாண்டியர் வரலாறு, நாம் தமிழர் பதிப்பகம், 10/4, தோப்பு வேங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-05.*

*5.சாமிநாதையர் உ.வே.(பதி.), -1918, பரிபாடல் மூலமும் பரிமேலழகரியற்றிய உரையும், கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை.*

*6.சாமிநாதையர் உ.வே.(உரை.), -1947, குறுந்தொகை, கபீர் அச்சுக்கூடம், சென்னை.*

*7.சாமிநாதையர் உ.வே.(பதி.), -2008(பதினொன்றாம் பதிப்பு), சிலப்பதிகாரம், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், எண். 2, அருண்டேல் கடற்கரை சாலை, பெசன்ட் நகர், சென்னை-90.*

*8.சாமிநாதையர் உ.வே.(பதி.), -2014(எ.ப.), புறநானூறு மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், எண். 2, அருண்டேல் கடற்கரை சாலை, பெசன்ட் நகர், சென்னை-90.*

*9.நக்கிரனார்(உரை.), -2010, இறையனார் அகப்பொருள், சாரதா பதிப்பகம், சென்னை-14.*